[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

களையும் பரிசோதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மக்களின் உயிரோடு விளையாடும் இக்கம்பெனிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவு திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (26—2—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

7. ஆயத்தீர்வை செலுத்துதல் குறித்து உள் மற்றும் மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாளிட்ட 207-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகளின் அடிப்படை விலையினை நிர்ணயிக்கும் அதிகாரத்தினை மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் ஆணையருக்கு வழங்குவது குறித்து உள் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் நாளிட்ட 217-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1989 பிப்ரவரி 18]

9. திருநெல்வேலி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நான்கு சிறு பயணிகள் பேருந்துகளுக்கு விதிக்கக்கூடிய வரி மற்றும் மேல் வரியினைக் கைவிடுதல் குறித்து உள் (போ. 1) துறையின் 1987 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாளிட்ட 1341-ஆம் எண் அரசாணையின் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. உள் துறையினால் வெளியிடப்பட்ட 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாளிட்ட II (2)/40/6063/76, மற்றும் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாளிட்ட II (2)/HO/3909/77 என் அறிவிக்கைகளை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாளிட்ட 2644-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

11. பொதுப் பணித் துறையின் சின்னாறு அணைக்கட்டுத் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் சில வாகனங்களுக்கு 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 31 ஆம் நாள் முடியவுள்ள காலவரைக்காக விதிக்கக்கூடிய வரி மற்றும் தண்டத் தீர்வையினைக் கைவிடுதல் குறித்து உள் (போ. 1) துறையின் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளிட்ட 3068-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு சட்டம் 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்—எதுவுமில்லை.